**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.229/2014**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பொன்னையா | **Caste** | : |
| **Father's Name** | : முருகேசன் | **Calling** | : உதவி இயக்குநர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திருச்செந்தூர் | **Age** | : 46/2026 |
| | | **Dated** | : 06.05.2026 |

**06.05.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 **திரு. பொன்னையா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**
**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது இந்திய அஞ்சல் துறையில் மதுரை மண்டல உதவி இயக்குநராக பணிபுரிந்துவருகிறேன். ஆஜா் எதிாி ஆத்துா் புறநிலை ஊழியராக பணிபுரிந்துவந்தார். கடந்த 2013-2014 வருடத்தில் திண்டுக்கல் கோட்ட அஞ்சல் உதவி கண்காணிப்பளராக பணிபுரிந்துவந்தேன். அந்த சமயத்தில் நிலக்கோட்டை உபகோட்டம் அஞ்சலக உதவி கண்காணிப்பளராக கூடுதல் பொறுப்பு வகித்தேன். எனக்கு முன்பாக திரு.ரகுபதி என்பவர் உபகோட்டம் அஞ்சலக உதவி கண்காணிப்பளராக கூடுதல் பொறுப்பில் இருந்தார். அவருக்கு முன்பாக உபகோட்டம் அஞ்சலக உதவி கண்காணிப்பளராக திரு.சிவநாதன் பணிபுரிந்துவந்துள்ளார்.

கடந்த 2012ம் வருடம் ஆத்தூர் அஞ்சலக அலுவலகத்தில் முதியோர் உதவிப்பணம் பட்டுவாடாவில் தவறுதல் நடந்ததாக திரு.சிவநாதன் விசாரணை செய்துள்ளார். அதனடிப்படையில் அந்தசமயத்தில் ஆத்தூர் அஞ்சலகத்தில் பணிபுரிந்த ஆஜர் எதிரி சக்திவேல் பணப்பட்டுவாடாவில் தவறு செய்ததாக தெரியவந்துள்ளது. நாகம்மாள், நந்தனார் தெரு, ஆத்தூர் என்பவருக்கு 2012 ஜீன், ஜீலை , ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் வந்த முதியோர் உதவித்தொகை தலா 1000 வீதம் 3 மாதங்களுக்கு 3000 ரூபாயை நாகம்மாளின் கைரேகையைப்போன்று எதிரியின் கைரேகையை பயன்படுத்தி பணத்தை தனது சொந்த உபயோகத்திற்கு எடுத்துள்ளார். ஆனால் நாகம்மாள் என்பவர் அந்த காலக்கட்டத்தில் உயிரோடு இல்லை என்பது சிவநாதன் விசாரணையின் போது தெரியவந்தது. மேலும் அக்கரைப்பட்டியைச்சேர்ந்த ராமு என்பவர் 2012 ஜீன், ஜீலை , ஆகஸ்ட் , செப்டம்பர் ஆகிய மாதங்களில் வந்த முதியோர் உதவித்தொகை தலா 1000 வீதம் 4 மாதங்களுக்கு 4000 ரூபாயை ராமுவின் கைரேகையைப்போன்று எதிரியின் கைரேகையை பயன்படுத்தி பணத்தை தனது சொந்த உபயோகத்திற்கு எடுத்துள்ளார்.

ஆனால் ராமு என்பவர் அந்த காலக்கட்டத்தில் உயிரோடு இல்லை என்பது சிவநாதன் விசாரணையின் போது தெரியவந்துள்ளது. மேலும் பசார் பீவி , ஆத்தூர் என்பவருக்கு 2012 ஆகஸ்ட் மாதத்தில் வந்த முதியோர் உதவித்தொகை ரூ.1000/- யை பசார் பீவி கைரேகையைப்போன்று எதிரியின் கைரேகையை பயன்படுத்தி பணத்தை தனது சொந்த உபயோகத்திற்கு எடுத்துள்ளார். ஆனால் பசார் பீவி இறந்துபோனதாக புகாரில் தெரிவித்துள்ளார்கள். போலிசார் விசாரணையில் பசார் பீவி உயிரோடு இருப்பது தெரியவந்ததை அடுத்து நான் அலுவலக விசாரணை செய்தேன். அதில் பசார் பீவி உயிரோடு இருந்ததும் பசார் பீவிக்கு வந்த ஆகஸ்ட் மாத முதியோர் உதவித்தொகை அவர் பெற்றுக்கொண்டதும் தெரியவந்தது. நடந்த சம்பவத்திற்காக அப்போது பணியில் இருந்த அஞ்சல் உபகோட்ட உதவி கண்காணிப்பாளர் திரு.ரகுபதி அவர்கள் செம்பட்டி காவல் நிலையத்திற்கு புகார் அளித்தார். அப்புகார் ஆனது மாவட்ட குற்றப்பிரிவிற்கு மாற்றப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு என்னை விசாரித்தார்கள். திரு.ரகுபதி அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் ரகுபதி என்பவருடையது.

**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி சக்திவேல் ஆத்துா் அஞ்சலகத்திற்கு அவர் பணியில் இருந்தபோது நடந்த முதியோர் உதவித்தொகை ரூ.7000 ரூபாயையும் மற்றும் அதற்கான வட்டித்தொகையையும் சேர்த்து 03.10.2012ம் தேதி செலுத்தியதற்கான Unclassified Receipt என்னால் சான்றொப்பம் இடப்பட்டது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிக்கு 04.10.2012ம் தேதி திரு.சிவநாதன் மூலம் இடைக்கால பணிநீக்க உத்தரவு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ரகுபதி கொடுத்த புகாரை முழுவதுமாக நான் படித்துப்பார்த்தேனா என்றால் 2014 விசாரணைக்கு அழைத்தபோது படித்துப்பார்த்தேன். புகாரில் குறிப்பிட்டுள்ள சம்பவத்தைப்பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுத்த ரகுபதி என்ன பதவியில் இருந்தார் என்றால் அஞ்சலக உபகோட்ட உதவி கண்காணிப்பாளர் , நிலக்கோட்டை . அவர் அங்கிருந்து கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுதான் சென்றால் என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2014 விசாரணையின்போது ரகுபதி உயிரோடு தான் இருந்தார் என்றால் சரிதான். ரகுபதியை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் அதைப்பற்றி தெரியாது. சிவநாதனை போலிசார் விசாரித்தார்களா என்றால் தெரியாது. என்னை போலிசார் விசாரித்தபோது ஆவணங்களின் அடிப்படையில் தான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் நான் விசாரணை செய்யவில்லை என்றால் நாகம்மாள், ராமு ஆகியோருக்கு ஆவணங்கள் மூலம் வாக்குமூலம் அளித்தேன். பசார் பீவிக்கு நானே விசாரித்து அதனடிப்படையில் வாக்குமூலம் அளித்தேன். பசார் பீவியை விசாரிப்பதற்கு மேல் அதிகாரி அனுமதி கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அனுமதி கடிதம் ஆவணமாக பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். மேற்படி அனுமதி கடிதத்தை போலிசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக பொதுமக்களிடம் இருந்து புகார் வந்தால் தான் நடவடிக்கை எடுக்கலாம் என்றால் இரண்டுவிதமாகவும் எடுக்கலாம். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் யாரும் புகார் கொடுத்திருக்கிறார்களா என்றால் என்னிடம் கொடுக்கவில்லை. நான் எனது அலுவலகத்தில் அல்லது விசாரணையில் புகார் ஏதும் கொடுக்கப்பட்டதா என்றால் தெரியவில்லை. புறநிலை ஊழியர்கள் நிரந்தர பதவியில் இல்லை என்றால் சரிதான். 2012ல் மணிஆர்டர் கொடுக்கச்செல்லும் போது அடையாள அட்டை சரிபார்த்துதான் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். அந்த அடையாள அட்டை தாசில்தாரின் உத்தரவு ஆகும். இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட 3 நபர்களின் முதியோர் உதவித்தொகை அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் எனது விசாரணையில் இல்லை.

அதற்கு முன்பு கொடுத்தார்களா என்று தெரியவில்லை. Unclassified Receipt என்பது அஞ்சலக அலுவலகத்தில் ஒரு பொதுவான கணக்கு என்றால் சரிதான். எந்த காரணத்திற்காக பணம் கட்டுகிறார்கள் என குறிப்பிட்டிருக்கும். மேற்படி தொகையை மணிஆர்டர் மூலம் கொண்டுசெல்லும்போது நேரடியாக பணம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். முதியோர் உதவித்தொகை அட்டையை அந்த நபர் தான் என உறுதி செய்தபின்பு கொடுப்பார்கள் என்றால் சரிதான். புறநிலை ஊழியர்களுக்கு ஒரு நபர் இறந்துவிட்டார் என்பது அவர்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு இறந்துவிட்டார் என்ற விவரம் எதிரிக்கு தெரியாது என்றும் எதிரி சரியாக முறைப்படி மேற்படி உதவித்தொகையை கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. எதிரியை சஸ்பெண்ட் செய்துவிடுவேன் என மிரட்டியதால் அவர் அந்த தொகையை கட்டியிருக்கிறார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி எந்தவொரு குற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.06 20:05:21 +0530

Judicial Magistrate No.II
Dindigul.